**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 25.11.2025**
**OS. No. 20/2018**
**வழக்கு சாட்சி PW.2–அண்ணாமலை , த/பெ.தானப்பன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 5 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

5 முதல் 9 **பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

2) 1ம் பிரதிவாதி லிங்கேஷ்வரன் என்பவர் அரசியல்வாதிகள் மற்றும் வருவாய் துறை அதிகாரிகளை வைத்து கொண்டு பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய முயற்சித்ததாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். அந்த அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் யார் என்று நான் சொல்லவில்லை என்றால் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. அந்த அதிகாரிகள் மற்றும் அரசியல் வாதிகள் மீது நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட சங்கதி நான் வழக்கிற்காக பொய்யாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பட்டா பெயர் மாற்றம் செய்ய முயற்சி செய்தபோது 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளுக்கு ஆட்சேபனை மனு வாதி கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை.

3) பட்டா மாறுதல் குறித்து வருவாய் துறையில் என்னை அழைத்து சொன்னார்கள், நான் பொது சொத்து அதனால் மாற்ற கூடாது என்று அவர்களிடம் தெரிவித்தேன். மேற்கண்ட சங்கதியை நான் வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மேற்கண்டவாறு என்னை எப்போது அழைத்து சொன்னார்கள் என்றால் 2018ல் சொன்னார்கள். தேதி, மாதம் ஆகியவற்றை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. உயிலானது பதிவு செய்யப்பட்டதா இல்லையா என்று தற்போது வரை நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதியோ, அவரது வாரிசுகளோ தாக்கல் செய்த பதிலுரையில் உயிலை குறித்து என்ன சொல்லியுள்ளார்கள் என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

4) கிராம நிர்வாக அலுவலர் என்னை அழைத்து சொன்னபோது உயில் ஆவணத்தின் நகல் என்னிடம் கொடுத்தார்கள். 2018 லேயே உயிலை வைத்து தான் பிரதிவாதிகள் பட்டாமாறுதல் கோருகிறார்கள் என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். இந்த வழக்கில் மேற்படி உயில் செல்லாது என்றோ, அதை ராமசாமி எழுதி கொடுக்கவில்லை என்றோ பரிகாரம் கேட்டுள்ளோமா என்றால், வழக்கில் சொல்லியுள்ளோம், பரிகாரமாக கேட்கவில்லை, பட்டா பெயர் மாற்றம் செய்யக்கூடாது என்று மட்டும் தான் கேட்டுள்ளோம். உயில் குறித்த விவரங்கள் எங்களுக்கு தெரியும் என்றும், உயில் அமலுக்கு வந்து, லிங்கேஷ்வரன்சொத்தை அனுபவித்து வந்த விவரம் எங்களுக்கு தெரியும் என்றும், அவருக்கு பட்டா வழங்குவதை நாங்கள் தடுக்கவேண்டும் என்றும், உயில் செல்லாது என்று கேட்காமல், பட்டா மாறுதல் மட்டும் செய்யக்கூடாது என்று கேட்பதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல.

5) என் முதல் விசாரணையில் 2016 ல் பட்டா மாறுதலுக்க மனு கொடுத்ததாக சொல்லிவிட்டு, 2018 ல் தான் அதற்கு விசாரணைக்கே அழைத்தார்கள் என்று சொல்லியுள்ளதிலிருந்தே உண்மை சங்கதிகள் குறித்து தெரிவித்து வழக்காடவில்லை என்று தெரியவருகிறது என்றால் சரியல்ல. நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடி கொள்ளுமாறு எழுத்துமூலம் ஏதாவது கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. வருவாய் துறையினர் மேல் இடத்திலிருந்து தங்களுக்கு அழுத்தம் வருவதால் பட்டா வழங்கிவிடுவோம் என்று தெரிவித்தாக என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இது தொடர்பாக புகார் ஏதேனும் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை, இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம்.

6) பட்டா மாறுதல் செய்வதற்கு முன்பாக நீதிமன்றத்திற்கு வர முடியாது என்றும், பட்டா மாறுதல் செய்தாலும், மேல்முறையீடு தான் வருவாய் துறையினரிடம் தாக்கல் செய்யவேண்டும் என்றால் நீதிமன்றத்தில் பார்த்து கொள்ளுமாறு அவர்கள் தான் சொன்னார்கள். நான் சொல்வது தவறு என்றும், யாரும் என்னிடம் அவ்வாறு சொல்லவில்லை என்றும், நாங்கள் ஏற்கனவே ஒரு பாகபிரிவினை வழக்கு தாக்கல்

செய்து, அது முழு விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டு மேல்முறையீடு செய்துள்ளோம் என்றும், வழக்கு நடவடிக்கைக்கள் குறித்து எங்களுக்கு நன்றாக தெரியும் என்று சொன்னால் சரியல்ல. என் நிரூபண வாக்குமூலத்தில் என்னிடம் எந்த அதிகாரி வழக்கு தாக்கல் செய்ய சொன்னார் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் என்னிடம் செய்ய சொன்னதாக தான் சொல்லியுள்ளேன்.

7) வழக்கில் என் அண்ணன் இது குறித்து இருவரிடமும் சொல்லியதாகத்தான் சொல்லியுள்ளார். இந்த வழக்கை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எங்களுக்கும் பாத்தியப்பட்டதாக உரிமை கோரி தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை, பொது சொத்து என்று சொல்லி தான் தாக்கல் செய்துள்ளோம். ராமசாமிக்கு மொத்தம் எத்தனை வாரிசுகள் என்றால் 6 நபர்கள் ஆவார்கள். அவர்கள் அனைவருக்கும் வாரிசுகள் உள்ளதா என்றால் ஒருவர் மட்டும் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார், மற்றவர்கள் அனைவரும் இறந்துவிட்டார்கள் அவர்கள் வாரிசுகள் உள்ளாரர்கள். அவர்கள் அனைவரையும் சேர்த்து தான் மேற்கண்ட பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அவர்கள் மீது தான் தற்போது மேல்முறையீடும் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையிலுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் அனைத்தும் ராமசாமி வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டது என்பதால் அவர்கள் அனைவரையும் இ ந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளோமா என்றால் இல்லை, அவர்களிடம் கேட்டோம், நாங்கள் தான் அனுபவத்தில் உள்ளதால் எங்களையே பார்த்து கொள்ள சொல்லிவிட்டனர். மேற்கண்ட சங்கதியை என் அண்ணன் வழக்கில் சொல்லியுள்ளாரா என்றால் எனக்கு தெரியவில்லை. என் நிரூபண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

8) நாங்கள் தான் தாவா சொத்தின் சுவாதீனத்தில் உள்ளோம் என்பதற்கு என் பெயரிலுள்ள கந்தாய ரசீதை தாக்கல் செய்துள்ளோம். அதில் பட்டா எண் குறிப்பிட்டுள்ளதா, சர்வே எண் குறிப்பிட்டுள்ளதா என்றால் பழைய பட்டா எண்.247, புதிய பட்டா எண்.1349 என பட்டா எண் தான் குறிப்பிட்டுள்ளது. தாவா சொத்து எங்களுக்கு தான் பாத்தியப்பட்டது என்று உரிமை விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளோமா

என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள கந்தாய ரசீதுகள் இந்த வழக்கு சொத்துக்குரிய கந்தாய ரசீது இல்லை என்றும், அது உரிமை விளம்புகை ஆவணமோ, அல்லது சுவாதீனத்தை காட்டும் ஆவணமோ இல்லை என்றால் சரியல்ல. பதிவு செய்யப்பட்ட உயில் பத்திரம் மூலமாக வழக்கு சொத்துக்களை லிங்கேஷ்வரனுக்கு அவரது தாத்தா எழுதி சட்டப்படி பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றும், அந்த உயில் அமலுக்கு வந்து அவர் உயிருடன் இருந்தவரை அனுபவித்து வந்தார் என்றும், அதன் பிறகு அவரது வாரிசுகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

9) வழக்கு சொத்துக்களை லிங்கேஷ்வரனுடன் சேர்ந்து கூட்டாக நான் அனுபவம் செய்ததாக என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் ராமசாமி கவுண்டரின் வாரிசுகள் அனைவருக்கும் உரிமை உள்ளது என சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், உயில் படி லிங்கேஷ்வரனுக்கும், அவர் இறந்தபிறகு அவரது வாரிசுகளும் அனுபவத்தில் உள்ளார்கள் என்றால் சரியல்ல. பட்டா வழங்கப்பட்டுவிட்டதா இல்லையா என தெரிந்து கொண்டேனா என்றால் இன்னும் பார்க்கவில்லை. பட்டா வழங்கும் விஷயத்தை தெரிந்து கொண்டு தான் வழங்கக்கூடாது என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றும், எந்த அதிகாரியும் எங்களிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

10) அரசியல்வாதி லிங்கேஷ்வரனிடமிருந்து சொத்தை விலைக்கு வாங்கவேண்டும் என்று முயற்சி செய்ததாக என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.பாகபிரிவினை வழக்கில் தாவா சொத்தை காட்டியுள்ளோமா என்றால் இல்லை. உண்மையில் இந்த சொத்து ராமசாமி வாரிசுகள் அனைவருக்கும் கூட்டாக பாத்தியப்பட்ட சொத்தாக இருந்திருந்தால் மேற்கண்ட வழக்கில் இந்த சொத்தை சேர்த்திருப்போம் என்றால், தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதாலும், மேற்கண்ட வழக்கு விலைக்கு வாங்கிய சொத்து குறித்து மட்டும் தாக்கல் செய்ததால் காட்டவில்லை. மேற்கண்ட சங்கதியை என் நிரூபண வாக்குமூலத்திலும், மேற்கண்ட வழக்கிலும் சொல்லியுள்ளோமா என்றால் இல்லை. பூர்வீக சொத்து உள்ளதாக

பாகபிரிவினை வழக்கில் சொல்லியுள்ளோமா என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும், தாவா சொத்து ராமசாமி கவுண்டருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்து என்று தான் அவரே உயில் எழுதி வைத்துள்ளார் என்றும், அதனால் தான் பாகபிரிவினை வழக்கில் இந்த சொத்தை காட்டவில்லை என்றால் சரியல்ல.

11) என் தாத்தா ராமசாமி, கோவிந்தன், தானப்பன், காளியப்பன், வெங்கடாஜலம் ஆகியோர்கள் சேர்ந்து 1941ல் கிரையம் பெற்றனர். யாரிடமிருந்து கிரையம் பெற்றனர் என்றால் அவரது பெயர் நினைவில்லை. இந்த வழக்கும், பாகபிரிவினை வழக்கும் ராமசாமி கவுண்டர் இறந்தபிறகு தான் தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அனைத்து சொத்திலும் வாரிசுகள் அனைவருக்கும் பாகம் உள்ளது என்று நான் சொல்கிறேனா என்றால் இல்லை. பங்காளிகளை ஏமாற்றி சொத்தை அபகரிக்கவேண்டும் என்பதற்காக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ராமசாமி கவுண்டர் தனக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து முறையாக ஜலகண்டாபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட உயில் மூலம் 1ம் பிரதிவாதி லிங்கேஷ்வரனுக்கு வழக்கு சொத்துக்களை 27.06.1979ல் எழுதி வைத்துள்ளார் என்றும், அவர் 07.02.1982ல் இறந்தவுடன் அந்த உயில் அமலுக்கு வந்து, வழக்கு சொத்துக்களின் பூர்ண உரிமையாளராக 1ம் பிரதிவாதி இருந்து அனுபவித்து வந்து, அவர் இறந்தபின் வழக்கு சொத்துக்களை அவரது வாரிசுகளான 5 முதல் 9 பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றும், இது வெளிப்படையாக எனக்கு தெரியும்எ ன்றும், 1ம் பிரதிவாதியின் குடும்பத்தை துன்பபடுத்தவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் என் தகப்பனாரும், அவரை தொடர்ந்து நானும், என் சகோதரனும், வழக்கு மேல் வழக்கு தாக்கல செய்து, 1996ம் ஆண்டிலிருந்து தொந்தரவு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. உண்மையான உரிமையாளருக்கு எதிராக நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்க இயலாது என்றும், தாவா சொத்துக்கள் எங்களுக்கு உரிமை உள்ளது என்று நாங்கள் கோரும் பட்சத்தில் விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும்

என்றால் சரியல்ல. ராமசாமியின் வாரிசுகளை இந்த வழக்கில் சேர்க்காததாலும் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

ஒம்/-திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.